**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

முன்னிலை: திருமதி. R. சுஜாதா, B.Sc., L.L.M.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 187/2023</u>**

பொள்ளாச்சி தாலூக்கா,சிஞ்சுவாடி கிராமம் மஜரா குண்டலப்பட்டி, க.எண்.4/83 முகவரியில் வசிக்கும் ராமசாமிநாயக்கர் மகன் சுமார் 72 வயதுள்ள R.தாசமுத்துநாயக்கர்.

...வாதி

**/ எதிர் /**

1.பொள்ளாச்சி தாலூக்கா, பொள்ளாச்சி டவுன் வெங்கடேசா காலனி, சொர்ணபுஸ்பம் காலனி க.எண்.22 முகவரியில் வசிக்கும் ராமலிங்கம் மகன் சுமார் 45 வயதுள்ள R.சந்திரன்.

2.மாவட்ட ஆட்சியர் , மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை.

3.வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பொள்ளாச்சி.

4.V.A.O. கிராம நிர்வாக அலுவகம், சிஞ்சுவாடி, பொள்ளாச்சி.

5.சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கோமங்கலம்.

... பிரதிவாதிகள்

தாவா சொத்துக்களில் வாதிக்கு பாத்தியப்பட்ட ஷை வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா A-

Schedule சொத்துக்களை இந்த 1ம் பிரதிவாதியாவது அவரது ஆட்களாவது உள்ளீட்டார்களாவது எவ்விதத்திலும் ஆக்கிரமிக்கவோ வாதியின் சுவாதீனத்திற்கு எவ்விதத்திலும் இடைஞ்சல் தரவோ கூடாது என இந்த 1ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும் ஷை தாவா A,B- Schedule சொத்துக்களை அளவீடு செய்து எல்லைகள் நிர்ணயிக்கும் வரை தாவா B-Schedule சொத்துக்களை பொறுத்து நிர்ணயிக்கும் வரை தாவா B-Schedule சொத்துக்களைப் பொறுத்து வருவாயினங்களில் எவ்வித பெயர் மாற்றமும் செய்யக்கூடாது என இந்த 3,4 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும் ஷை தாவா A.B-Schedule சொத்துக்களை அளவீடு செய்து எல்லைகள் நிர்ணயிக்கும் வரை தாவா B-Schedule சொத்துக்களை பொறுத்து எவ்வித விற்கிரையங்களையும் வில்லங்களையும் பதிவு செய்யக்கூடாது என இந்த 5 பிரதிவாதிக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும் தாவா செலவு தொகை பிரதிவாதியால் வாதிக்கு கிடைக்கும்படிக்கும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் நாள் : 28.06.2023

தாவா வியாஜ்ஜிய மூல நாள் 07.07.1976, 29.09.2020, 07.04.2021 மற்றும் 05.05.2023 ஆகிய தேதிகளில் சிஞ்சுவாடி கிராமம், பொள்ளாச்சி தாலூக்காவில் ஆரம்பம்.

தாவா சொத்து மதிப்பு ரூ. 3000 அதற்கு நீதிமன்ற கட்டண சட்டம், பிரிவு 27(c)ன்படி மற்றும் தாவா மதிப்பீட்டுச் சட்டம் 1955 ம்படி ரூ-90 செலுத்தப்பட்டுள்ளது.

**<u>மதிப்பீடு விவரம்</u>**

| | |
|---|---|
| தாவா 1 வது பரிகார மதிப்பு | ரூ.1000/- |
| தமிழ்நாடு தாவா மதிப்பீடு மற்றும் | |
| நீதிமன்றக் கட்டணச் சட்டம் | |
| பிரிவு 27(c) ன்படி நீதிமன்ற முத்திரைத்தாள் | |
| தாக்கல் செய்யப்பட்டது. | ரூ.30/- |
| தாவா 2 ஆவது பரிகார மதிப்பு | ரூ.1000/- |
| தமிழ்நாடு தாவா மதிப்பீடு மற்றும் | |
| நீதிமன்றக் கட்டணச் சட்டம் | |
| பிரிவு 27(c) ன்படி நீதிமன்ற முத்திரைத்தாள் | |
| தாக்கல் செய்யப்பட்டது. | ரூ.30/- |
| தாவா 3 வது பரிகார மதிப்பு | ரூ.1000/- |
| தமிழ்நாடு தாவா மதிப்பீடு மற்றும் | |
| நீதிமன்றக் கட்டணச் சட்டம் | |
| பிரிவு 27(c) ன்படி நீதிமன்ற முத்திரைத்தாள் | |
| தாக்கல் செய்யப்பட்டது. | ரூ.30/- |
| தாவா மொத்த மதிப்பு | ரூ.3000/- |
| இதற்கு நீதிமன்ற கட்டணம் | ரூ.90/- |

இவ்வழக்கானது என் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.சித்ரகலா அவர்கள் முன்னிலையாகியும், 1-ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.A.சிவரஞ்சனி அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் திரு. அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், வாதி தரப்பில் ஆஜரின்மையாலும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்:

1. வாதியின் வருகையின்மை காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது
2. செலவுத்தொகை இல்லை.

<u>MEMO OF COST LIST</u>

(Both side cost list not filed )

<u>**சொத்து விபரம்**</u>

<u>A-Schedule</u>

திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார்பதிவு வட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, சிஞ்சுவாடி கிராமம், க.ச.225/1 நெ.காலை பு.ஏ.427 க்கு தரம் ரூ.3.46 உள்ள பூமியும்,

பின்னும் ஷை கிராமம் க.ச.225/3B நெ.காலை பு.ஏ.0.09 க்கு தீர்வை ரூ.0.07 க்கு செக்குபந்தி

க.ச.225/2A நெ.காலைக்கும் -மேற்கு

ராஜேஷ்குமார் இடத்திற்கும் -தெற்கு

கிழமேல் ரோட்டுக்கும் -வடக்கு

தென்வடல் ரோட்டுக்கும் -கிழக்கு

இதன் மத்தியில் பு.ஏ.0.09 உள்ள பூமியும் ஷை பூமிக்கு உரிய மாமூல் வழிநடை பாசன பாத்தியங்கள் சகிதம்.

## B-Schedule

திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார்பதிவு வட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, சிஞ்சுவாடி கிராமம், க.ச.225 நெ.காலை பு.ஹெ.3.14.0 க்கு பு.ஏ.7.76 தரம் ரூ.6.29 இதில்

க.ச.225/1 நெ.காலைக்கும் தெற்கு

கிழமேல் ரோட்டுக்கும் க.ச.225/3B நெ.காலைக்கும் வடக்கு

தென்வடல் ரோட்டுக்கும் க.ச.225/3B நெ.காலைக்கும் கிழக்கு

க.ச.212/2 நெ.காலைக்கும் மேற்கு

இதன் மத்தியில் பு.ஏ.3.31 க்கு தரம் ரூ.2.68 உள்ள பூமியும் ஷை பூமியில் ஸ்ரீ செல்வகணபதி நகர் என்ற பெயரில் மனையிடங்களாக பிரிக்கப்பட்டுள்ள மனையிடங்களும் சகிதம். ஷை பூமி தற்கால சப்டிவிசன்படி க.ச.225/2A நெ.காலைக்கு கட்டுப்பட்டது.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/-R.சுஜாதா

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

------------------------------

**<u>தீர்ப்பாணை</u>**

அ.வ.எண். 187/2023

நாள். 10.03.2026

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

------------------------------